www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இராமநாதபுரம் மாவட்டம்.

## அரையாண்டுத் தேர்வு - டிசம்பர் 2024

## மேல்நிலை முதலாம் ஆண்டு - வேதியியல் விடைக்குறிப்பு

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

| Q No | பதில் | Q.No | பதில் |
|---|---|---|---|
| 1 | அ) $_6C^{12}$ | 9 | ஆ) எத்தனால் + நீர் |
| 2 | ஈ) ஸ்டார்க் விளைவு | 10 | இ) T வடிவம் |
| 3 | ஈ) ஹைட்ரஜன் | 11 | ஆ) டை மெத்தில் ஈதர் |
| 4 | அ) சோடியம் அலுமினியம் சிலிகேட் | 12 | ஈ)கார்பன் நேரயனி மற்றும் கார்பன் எதிரயனி |
| 5 | அ) $CaSO_4.2H_2O$ | 13 | அ) நைட்ரோ பென்சீன் |
| 6 | ஈ)அதிக அழுத்தத்தில் மூலக்கூறுகளுக்கிடையேயான கவர்ச்சிவிசை புறக்கணிக்கத்தக்கதன்று. | 14 | அ) n - பியூட்டைல் குளோரைடு |
| 7 | ஈ) நிறை / கனஅளவு | 15 | ஈ) 5.6 |
| 8 | ஆ) 5 | | |

## பகுதி – II

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடைளிக்கவும். (வினா எண் 24 கட்டாயமாக விடையளிக்கவும்) 6 x 2= 12

**16. சமான நிறை வரையறு?**

1.008g ஹைட்ரஜன் (அ) 8g ஆக்ஸிஜன் (அ) 35.5g குளோரின் ஆகியவற்றோடு சேரக்கூடிய (அ) இடப்பெயர்ச்சி செய்யக் கூடிய ஒரு தனிமம் (அ) சேர்மம் (அ) அயனியின் நிறையே அதன் கிராம் சமான நிறை எனப்படும்.

**17. பௌலி தவிர்க்கைத் தத்துவத்தை கூறு?**

ஒரு அணுவிலுள்ள எந்த இரு எலக்ட்ரான்களுக்கும், அவற்றின் நான்கு குவாண்டம் எண்களின் மதிப்பின் தொகுப்பும் ஒன்றாக இருக்காது.

**18. கனநீரின் பயன்கள் யாவை? (ஏதேனும் 2 மட்டும்)**

- ✶ அணுக்கரு உலைகளில் மட்டுப்படுத்தியாக
- ✶ அணுக்கரு உலைகளில் குளிர்விப்பானாகவும்
- ✶ கரிம வினைகளின் வழிமுறைகளை தீர்மானிப்பதில் சுவடறிவானாகப் பயன்படுகிறது.

**19. a = 0 என்ற வாண்டர் வால்ஸ் மாறிலியைக் கொண்ட வாயுவினை திரவமாக்க முடியுமா? விவரி?**

- ➢ திரவமாக்க முடியாது.
- ➢ a = 0 எனில் வாயு மூலக்கூறுகளுக்கிடையே எந்தவிதமான கவர்ச்சி விசையும் ஏற்படாது.

**20. கிப்ஸ் கட்டிலா ஆற்றலை வரையறு.**

- ✶ G = H – TS
- ✶ G = கட்டிலா ஆற்றல் H = என்தால்பி S = என்ட்ரோபி T = வெப்பநிலை.

**21. நிறைதாக்க விதியை வரையறு?**

- ➢ கொடுக்கப்பட்ட வெப்பநிலையில், ஒரு வேதி வினையின்வேகம் என்பது அந்நேரத்தில், உள்ள வினைபடு பொருள்களின் மோலார் செறிவுகளின் பெருக்கற்பலனுக்கு நேர் விகிதத்தில் இருக்கும்.

**22. சவ்வூடு பரவல் என்றால் என்ன?**

ஒருகூறு புகவிடும் சவ்வின் வழியாக, கரைப்பான் மூலக்கூறுகள் செறிவு குறைந்த கரைசலில் இருந்து, செறிவு மிகுந்த கரைசலுக்கு விரவிச் செல்லும் தன்னிச்சையான நிகழ்வு ஆகும்.

**23. ஒரு சேர்மத்தின் அரோமேட்டிக் தன்மையை ஹக்கல் விதிப்படி எவ்வாறு தீர்மானிக்கலாம்?**

- ✶ மூலக்கூறு சமதளத்தில் அமைய வேண்டும்.
- ✶ வளையத்தில் உள்ள எலக்ட்ரான்கள் முழுமையும் உள்ளடங்காத் தன்மையினைப் பெற்றிருக்க வேண்டும்.
- ✶ வளையத்தில் (4n+2) எலக்ட்ரான்கள் இருக்க வேண்டும். (n=0,1,2,3….முழு எண்களாகும்).

**24.**

i) $C_6H_5Cl + 2NH_3 \longrightarrow C_6H_5NH_2 + NH_4Cl$

ii) $C_6H_5Cl + 2Na + C_6H_5Cl \xrightarrow{\text{ஈதர்} / \triangle} C_6H_5 - C_6H_5 + 2NaCl$

## பகுதி – III

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடைளிக்கவும். (வினா எண் 33 கட்டாயம் விடையளிக்கவும்) 6 x 3 = 18

**25. கோடிட்ட தனிமங்களின் ஆக்சிஜனேற்ற எண்ணை கண்டறிக**

**i)** $\underline{C}O_2$ = +4 ii) $H_2\underline{S}O_4$ = +6 iii) $\underline{Cr}_2O_7^{2-}$ = +6

**26. திரைமறைப்பு விளைவு என்றால் என்ன?**

உள்கூட்டில் உள்ள எலக்ட்ரான்கள், அணுக்கருவிற்கும் இணைதிறன் எலக்ட்ரான்களுக்கும் இடையே ஒரு திரை போல செயல்படுகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**27 பாரா ஹைட்ரஜனை, ஆர்த்தோ ஹைட்ரஜனாக எவ்வாறு மாற்றலாம்? (ஏதேனும் 3 மட்டும்)**

- ✶ பிளாட்டினம், இரும்பு போன்ற வினைவேக மாற்றிகளைச் சேர்த்தல்
- ✶ மின்பாய்ச்சல் மூலமாகவும்
- ✶ $800^0$ C க்கு மேல் வெப்பப்படுத்துதல்
- ✶ $O_2$, NO, $NO_2$ போன்ற பாரா காந்த தன்மையுள்ள மூலக்கூறுகளைச் சேர்த்தல்
- ✶ பிறவி நிலை (அல்லது) அணுநிலை ஹைட்ரஜனை சேர்த்தல்

**28 வெப்பஇயக்கவியலின் மூன்றாம் விதியை கூறு.**

- ✶ தனி பூஜ்ஜிய வெப்பநிலையில் ஒரு குறைபாடற்ற படிகத்தின் என்ட்ரோபி மதிப்பு பூஜ்ஜியம்.

**29 0.5 மோல் மெத்தனால் 1.5 மோல் நீருடன் கலக்கப்பட்டுள்ளது. அக்கரைசலில் உள்ள மெத்தனால் மற்றும் நீரின் மோல் பின்னத்தைக் கணக்கிடுக.**

$$\text{எத்தனாலின் மோல் பின்னம்} = \frac{\text{ஏத்தனாலின் மோல்களின் எண்ணிக்கை}}{\text{ஏத்தனால் மற்றும் நீர் மோல்களின் எண்ணிக்கை}} = \frac{0.5}{0.5 + 1.5} = \mathbf{0.25}$$

$$\text{நீரின் மோல் பின்னம்} = \frac{\text{நீரின் மோல்களின் எண்ணிக்கை}}{\text{ஏத்தனால் மற்றும் நீர் மோல்களின் எண்ணிக்கை}} = \frac{1.5}{0.5 + 1.5} = \mathbf{0.75}$$

(அல்லது)

நீரின் மோல் பின்னம் = 1 - எத்தனாலின் மோல் பின்னம் = 1 – 0.25 = 0.75

**30 ஃபஜான் விதியை விளக்குக.**

- ✶ அதிக சகப்பிணைப்புத் தன்மையினைப் பெற்றிருக்க வேண்டுமெனில் நேர் அயனி மற்றும் எதிர் அயனி ஆகிய இரண்டின் மின்சுமைகளும் அதிகமாக இருக்க வேண்டும்.
- ✶ எ.கா : அலுமினியம் குளோரைடு, மெக்னீசியம் குளோரைடு மற்றும் சோடியம் குளோரைடு ஆகிய மூன்று வகை அயனிச் சேர்மங்களை ஒப்பிடும் போது நேர் அயனிகளின் மீதுள்ள மின்சுமை $Na^+ < Mg^{2+} < Al^{3+}$ என்ற வரிசையில் அதிகரிப்பதால் சகப்பிணைப்புத் தன்மையும் $NaCl < MgCl_2 < AlCl_3$ என்ற அதே வரிசையில் அதிகரிக்கிறது.
- ✶ நேர் அயனியின் உருவளவு சிறியதாகவும், எதிரயனியின் உருவளவு பெரியதாகவும் இருப்பின் முனைவுறுத்தும் திறன் அதிகமாக இருக்கும். மேலும் சகப்பிணைப்புத் தன்மை அதிகமாக அமையும்.

சோடியம் குளோரைடைக் காட்டிலும் லித்தியம் குளோரைடு அதிக சகப்பிணைப்புத் தன்மை உடையது. $Na^+$ அயனியைக் காட்டிலும் $Li^+$ ன் உருவளவு சிறியது.

**31 2–பியூட்டீனை எடுத்துக்காட்டாக கொண்டு வடிவ மாற்றியங்களை விளக்குக?**



சிஸ் - 2-பியூட்டீன் டிரான்ஸ் - 2-பியூட்டீன்

- ❖ இவ்விரு சேர்மங்களும் வடிவமாற்றியங்கள் என அழைக்கப்படுகின்றன.
- ❖ இவை சிஸ் மற்றும் டிரான்ஸ் ஆகிய சொற்கூறுகளால் வேறுபடுத்தி அறியப்படுகின்றன.
- ❖ இரட்டைப் பிணைப்பால் பிணைக்கப்பட்டுள்ள கார்பனுடன் இணைக்கப்பட்டுள்ள இரு தொகுதிகளும் ஒத்திருப்பின் அவை சிஸ்மாற்றியம் எனவும்,
- ❖ இரு ஒத்தத் தொகுதிகளும் இரட்டைப் பிணைப்பின் எதிர்எதிர் பக்கங்களில் காணப்படின் அம்மாற்றியங்கள் டிரான்ஸ்மாற்றியங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- ❖ ஏதேனும் ஒரு மாற்றியத்தினை அதிக வெப்பநிலைக்கு சூடுபடுத்துதல் அல்லது ஒளியை உட்கவரச் செய்வதன் மூலம் சிஸ் மாற்றியத்தினை, டிரான்ஸ் மாற்றியமாகவோ அல்லது டிரான்ஸ் மாற்றியத்தினை சிஸ் மாற்றியமாகவோ மாற்றஇயலும்.

**32 கருக்கவர் பொருள் மற்றும் எலக்ட்ரான் கவர் பொருள் வேறுபடுத்துக?**

| கருக்கவர் பொருள்கள் | எலக்ட்ரான்கவர் பொருள்கள் |
|---|---|
| ➢ நேர்மின் தன்மையுடைய மையத்தின் மீது அதிக நாட்டமுடையவை. | ➢ எதிர்மின் தன்மையுடைய மையத்தின் மீது அதிக நாட்டமுடையவை. |
| ➢ பிணைப்பில் ஈடுபடா எலக்ட்ரான்கள் கொண்டவை. | ➢ நேர் அயனிகள் (அ) எலக்ட்ரான் பற்றாகுறை கொண்ட நடுநிலை மூலக்கூறுகள். |
| ➢ லூயி காரங்கள். | ➢ லூயி அமிலங்கள். |
| ➢ எலக்ட்ரானை வழங்குபவை. | ➢ எலக்ட்ரானை ஏற்பவை. |
| ➢ எ.கா : $NH_3$, $H_2S$, $Cl^-$, $CN^-$ | ➢ எ.கா : $NO_2^+$, $H^+$, $CO_2$, |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**33** $NH_3$, $N_2$, மற்றும் $H_2$ ஆகியவற்றின் சமநிலைச் செறிவுகள் முறையே $1.8 \times 10^{-2}$ M, $1.2 \times 10^{-2}$ M மற்றும் $3 \times 10^{-2}$M $N_2$ மற்றும் $H_2$ லிருந்து $NH_3$ உருவாகும் வினைக்கு சமநிலை மாறிலியின் மதிப்பைக் காண்க.

$$N_{2(g)} + 3H_{2(g)} \rightleftharpoons 2NH_{3(g)}$$

$$K_C = \frac{[NH_3]^2}{[N_2][H_2]^3} = \frac{1.8\times10^{-2}\times1.8\times10^{-2}}{1.2\times10^{-2}\times3\times10^{-2}\times3\times10^{-2}\times3\times10^{-2}}$$

$$= 1\times10^{3}\ l^{2}\ mol^{-2}$$

## பகுதி – IV

**34 அ**

**i) வினை கட்டுப்பாட்டு காரணி என்றால் என்ன?**

வேதி வினை கூறு விகித அடிப்படையில் அமையாத வினைபடு பொருட்களைக் கொண்டு வினை நிகழ்த்தும் போது எந்த வினைபடு பொருள் முதலில் முழுவதும் வினைபடுகிறதோ அந்த வினைபடு பொருளானது வினை தொடர்ந்து நிகழ்வதைக் கட்டுப்படுத்துகிறது. இதுவே வினை கட்டுப்பாட்டுக் காரணி எனப்படும்.

**ii) மூலைவிட்ட தொடர்பை விவரி?**

தனிம வரிசை அட்டவணையின் 2 மற்றும் 3ஆம் வரிசையில் மூலைவிட்டத்திலுள்ள தனிமங்களின் பண்புகளுக்கிடையே ஒற்றுமைத் தன்மை காணப்படுகிறது.

**Li → Mg   Be → Al   B → Si**

(அல்லது)

**ஆ**

**i) முதன்மைக் குவாண்டம் எண் (n) பற்றி குறிப்பு வரைக?**

- அணுக்கருவைச் சுற்றி எலக்ட்ரான்கள் சுழன்று வரும் ஆற்றல் மட்டத்தை குறிப்பிடப்படுகிறது. இது 'n' எனக் குறிக்கப்படுகிறது.
- n = 1 எனில் K , n = 2 எனில் L , n = 3 எனில் M கூட்டினையும் குறிப்பிடுகின்றன.
- ஒரு குறிப்பிட்ட கூட்டிலுள்ள அதிகபட்ச எலக்ட்ரான்களின் எண்ணிக்கை $2n^2$

**ii) பௌலி தவிர்க்கைத் தத்துவத்தை கூறு?**

ஒரு அணுவிலுள்ள எந்த இரு எலக்ட்ரான்களுக்கும், அவற்றின் நான்கு குவாண்டம் எண்களின் திப்பின் தொகுப்பும் ஒன்றாக இருக்காது.

**35 அ**

**i) பாரீஸ் சாந்து எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?**

$$2CaSO_4.2H_2O(s) \xrightarrow{393K} 2CaSO_4.H_2O + 3H_2O$$

**ii) கால்சியம் உயிரியல் முக்கியத்துவத்தை சுருக்கமாக விவரி?**

- எலும்பு மற்றும் பல்களில் முக்கிய பகுதிப் பொருளாக இது பயன்படுகிறது.
- கால்சிடோனின் மற்றும் பாராதைராய்டு ஹார்மோன்களால் இரத்தத்தில் இதன் அளவு பராமரிக்கப்படுகிறது.
- இரத்தத்தில் இதன் குறைபாட்டினால் இரத்தம் உறைய அதிக நேரம் ஆகிறது.
- இது தசை சுருக்கத்திற்கு முக்கிய காரணமாகிறது..

(அல்லது)

**ஆ**

**i) படிகக்கூடு ஆற்றல் என்றால் என்ன?**

✶ ஒரு படிகத்திள்ள அயனிகளை அதன் படிக அணிக்கோவை புள்ளிகளிலிருந்து முடிவிலா தொலைவிற்கு நீக்குவதற்கு தேவைப்படும் ஆற்றல் .

**ii) $K_P$ மற்றும் $K_C$ க்கு இடையேயான தொடர்பினை வருவி.**

$$xA + yB \rightleftharpoons lC + mD$$

சமநிலை மாறிலி Kc யின் மதிப்பு $Kc = \frac{[C]^l\ [D]^m}{[A]^x\ [B]^y}$ ⟶ 1

சமநிலை மாறிலி Kp யின் மதிப்பு $Kp = \frac{(pC)^l\ (pD)^m}{(pA)^x\ (pB)^y}$ ⟶ 2

நல்லியல்பு வாயுச் சமன்பாட்டின்படி $PV = nRT$ (or) $P = \frac{n}{V}RT$



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

எனவே பகுதி அழுத்தம் (P) = மோலார் செறிவு x RT

எனவே $(pA)^x = [A]^x [RT]^x$ $(pB)^y = [B]^y [RT]^y$ $(pC)^l = [C]^l [RT]^l$ $(pD)^m = [D]^m [RT]^m$

இதன் மதிப்புகளை சமன்பாடு (2)ல் பிரதியிட

$$Kp = \frac{[C]^l [RT]^l \; [D]^m [RT]^m}{[A]^x [RT]^x \; [B]^y [RT]^y} \longrightarrow 3$$

$$Kp = \frac{[C]^l [D]^m [RT]^{l+m}}{[A]^x \; [B]^y [RT]^{x+y}}$$

$$Kp = \frac{[C]^l [D]^m}{[A]^x \; [B]^y} [RT]^{(l+m)-(x+y)} \longrightarrow 4$$

$$\therefore \; Kp = Kc\,(RT)^{\Delta ng} \longrightarrow 5$$

**36 அ**

**i) விரவுதல் மற்றும் பாய்தல் வேறுபாடு தருக?**

| விரவுதல் | பாய்தல் |
|---|---|
| ஒரு வாயுவின் மூலக்கூறு மற்றொரு வாயுவின் வழியே நகரும் பண்பானது விரவுதல் எனப்படும். | ஒரு கலனிலுள்ள வாயுவானது மிகச் சிறிய துளையின் வழியே வெளியேறும் பண்பானது பாய்தல் எனப்படும். |

**ii) ஹென்றி விதி மற்றும் அதன் வரம்புகளை விளக்குக.**

குறைவான செறிவுக் கொண்ட கரைசல்களில் "ஆவி நிலையிலுள்ள வாயுவின் பகுதி அழுத்தமானது கரைசலில் உள்ள வாயுக் கரைபொருளின் மோல்பின்னத்திற்கு நேர் விகிதத்திலிருக்கும்".

**ஹென்றி விதியின் வரம்புகள்:**

- ✶ ஹென்றி விதியானது, மிதமான வெப்பநிலை மற்றும் அழுத்தநிலைகளில் மட்டுமே பொருந்தக்கூடியது.
- ✶ குறைந்த கரைதிறன் கொண்ட வாயுக்கள் மட்டுமே ஹென்றி விதிக்கு உட்படுகின்றன.
- ✶ கரைப்பான்களுடன் வினைபுரியக்கூடிய வாயுக்கள் ஹென்றி விதிக்கு உட்படுவதில்லை.

**ஆ**

**(அல்லது)**

**$N_2$மூலக்கூறு உருவாதலை மூலக்கூறு ஆர்பிட்டால் (MO) கொள்கை மூலம் விவாதிக்கவும்.**




- ➢ நைட்ரஜன் அணுவின் எலக்ட்ரான் அமைப்பு $1s^2\,2s^2\,2p^3$.
- ➢ நைட்ரஜன் மூலக்கூறின் எலக்ட்ரான் அமைப்பு $(\sigma 1s)^2,(\sigma^*1s)^2,(\sigma 2s)^2,(\sigma^*2s)^2, (\pi 2py)^2, (\pi 2pz)^2, (\sigma 2px)^2$
- ➢ பிணைப்புத் தரம் = $\frac{N_b - N_a}{2} = \frac{10 - 4}{2} = 3$
- ➢ மூலக்கூறில் தனித்த எலக்ட்ரான்கள் இல்லை. எனவே இது டையா காந்தப் பண்புடையது.

**37 அ**

**i) படிவரிசை சேர்மங்கள் என்றால் என்ன?**

**ஒரு குறிப்பிட்ட வினைசெயல் தொகுதியைப் பெற்று இரு அடுத்தடுத்த சேர்மங்களின் மூலக்கூறு வாய்ப்பாடு $-CH_2$ என்ற தொகுதியால் வேறுபடும் தொடர்ச்சியான கரிமச் சேர்மங்கள்**

**ii) பின்வரும் சேர்மங்களுக்கு வடிவமைப்பை தருக**

அ) 3–மெத்தில் பென்டேன்

```
CH3 – CH2 – CH – CH2 – CH3
             |
             CH3
```

ஆ) 2–மெத்தில் புரோப்பேன்– 2–ஆல்

```
           CH3
            |
   CH3 – C –  CH3
            |
           OH
```

இ) 3–குளோரோ பியூட்– 1–ஈன்

```
CH3 – CH – CH = CH2
       |
       Cl
```



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அல்லது)

**ஆ** i) **மார்கோவ்னிகாப் விதியினை தகுந்த உதாரணத்துடன் விளக்குக.**

"ஓர் சீர்மையற்ற ஆல்கீனுடன் ஹைட்ரஜன் ஹேலைடு வினைபுரியும் போது, ஹைட்ரஜனானது அதிக ஹைட்ரஜன் அணுக்களையுடைய கார்பனிடமும் ஹாலஜனானது குறைந்த ஹைட்ரஜன் அணுக்களை உடைய கார்பனிடமும் சேர்கின்றன.

$$CH_3 - CH = CH_2 + HBr \longrightarrow CH_3 - CH(Br) - CH_3$$

புரப்பிலீன் → ஐசோ புரோப்பைல் புரோமைடு

ii) **எத்திலீனை குளிர்ந்த காரம் கலந்த பொட்டாசியம் பெர்மாங்கனேட்டுடன் வினைப்படுத்தும் போது நிகழ்வது யாது?**

$$CH_2 = CH_2 \xrightarrow[(O)]{\text{காரங்கலந்த } KMnO_4/H_2O} CH_2(OH) - CH_2(OH)$$

எத்திலீன் → எத்திலீன் கிளைக்கால்

**38 அ** i) **எலக்ட்ரோமெரிக் விளைவு என்றால் என்ன?**

நிறைவுறா சேர்மங்களில் தாக்கும் விளைபொருள் முன்னிலையில் நடைபெறும் ஒரு தற்காலிகமான விளைவு எலக்ட்ரோமெரிக் விளைவு எனப்படும்.

**ii)**

**50. பின்வரும் சேர்மங்களின் தயாரிப்பினை விளக்குக.**

**1.DDT 2. குளோரோஃபார்ம் 3. பை பீனைல் 4. குளோரோபிக்ரின் 5. ஃப்ரியான் - 12**

**1.DDT** : அடர் $H_2SO_4$ முன்னிலையில் குளோரோ பென்சீன் ட்ரைகுளோரோ அசிட்டால்டிஹைடுடன் வினைபுரிந்து DDT கொடுக்கிறது.




**2. குளோரோஃபார்ம்** : ஆய்வகத்தில் எத்தில் ஆல்கஹாலை சலவைத்தூளுடன் வினைப்படுத்திப பின் அதனைத் தொடர்ந்து வாலைவடித்தல் மூலம் குளோரோஃபார்ம் பெறப்படுகின்றது. இவ்வினை மூன்று படிகளில் நிகழ்கிறது. $(CaOCl_2 + H_2O \rightarrow Cl_2 + Ca(OH)_2)$

படி 1 : ஆக்ஸிஜனேற்றம் : $CH_3 - CH_2 - OH + Cl_2 \rightarrow CH_3 - CHO + HCl$

படி 2 : குளோரினேற்றம் : $CH_3 - CHO + 3Cl_2 \rightarrow CCl_3 - CHO + 3HCl$

படி 3 : நீராற்பகுத்தல் : $2CCl_3 - CHO + Ca(OH)_2 \rightarrow 2CHCl_3 + (HCOO)_2Ca$

(அல்லது)

**ஆ**

**அமில மழை எவ்வாறு உருவாகிறது? அமில மழையின் தீய விளைவுகள் யாவை?**

**அமில மழை உருவாதல் :**

- ✶ மழைநீரின் pH மதிப்பு 5.6 க்கு கீழ் குறையும் போது அது அமில மழை என்றழைக்கப்படுகிறது.
- ✶ நிலக்கரி, எண்ணெய்களை எரித்தல், அனல்மின் நிலையங்கள், வாகன இயந்திரகளின் பெட்ரோல் மற்றும் டீசல் போன்றவற்றை எரித்தலால் சல்பர் டையாக்ஸைடு மற்றும் நைட்ரஜன்ஆக்ஸைடுகள் உருவாகின்றன. இவைகளை மேகங்களிலுள்ள நீர்த்திவலைகளால் உறிஞ்சப்பட்டு முறையே கந்தக அமிலம் மற்றும் நைட்ரிக் அமிலங்களால் மாற்றப்படுவதால் அமில மழை உருவாகிறது..

**அமில மழையின் தீய விளைவுகள்:**

- ✶ அமில மலையானது, கட்டிடங்கள் மற்றும் பளிங்கு பொருள்களின் மீது அதிகமான பாதிப்புகளை உருவாக்குகின்றன. பளிங்கு கற்களின் மீது ஏற்படுத்தும் இந்த பாதிப்புகள் கல்குடம்" எனப்படுகிறது.
- ✶ அமில மழையானது நீரிலுள்ள தாவர மற்றும் விலங்குகளைப் பாதிக்கிறது.
- ✶ தாவரங்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை அமில மழை கரைத்து நீக்குவதன் மூலம் விவசாயம், மரங்கள் மற்றும் தாவரங்களுக்கு கேடு விளைவிக்கின்றன.
- ✶ இது தண்ணீர்க் குழாய்களை அரித்து, இரும்பு, லெட் மற்றும் காப்பர் போன்ற கன உலோகங்களை குடிநீரில் கரைக்கின்றது. இதனால் நச்சு விளைவுகளை உருவாகுகிறது.
- ✶ இவை மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு சுவாசக் கோளாறை உண்டாக்குகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com